பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 11 திங்கட்கிழமை 27.07.2020 கதிர் 260

### இது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தல் காலத்தில் அரசியல் தலைவர்களின் பேச்சுகள் எல்லாம் எந்த மட்டத்துக்கு இறங்கும் என்று நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போன்ற மூத்த அரசியல்வாதி கூட எத்துணை தரம் பக்கம்02

# இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் சர்வதேசம்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்தல்

(அப்துல் சலாம் யாசீம்)

திருகோணமலை,ஜூலை27

அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகம் இலங்கைக்குக் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.



## முன்னணியின் விஞ்ஞாபனம் திருகோணமலையில் வெளியீடு



திருமலை, ஜூலை 27

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் திருகோணமலையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விஞ்ஞாபனத்தின் மூலப்பிரதி கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரனால் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டு விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டது. பக்கம் 02

## நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும்; யார் வழங்குகின்றனர் என்பது முக்கியமல்ல

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிப்பு



தமிழர்களின் நீண்டகால கோரிக்கையான அரசியல் தீர்வை எந்த அரசு பெற்றுக்கொடுக்கப்போகின்றது என்பது எமக்கு முக்கியமல்ல. தமிழர்களுகான நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். அதனைப் பெற்றுக்கொள்ள சூட்சமமாகவும் நாம் செயற்பட்டாக வேண்டும். ராஜபககஷவினர்அரசு புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். எனவே, அதனை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பக்கம் 02

## பொதுவாக்கெடுப்பைக் கோருகிறது விக்கியின் தேர்தல் விஞ்ஞாபனம்!

வவுனியா, ஜூலை 27

இலங்கையில் தமிழ் மக்கள்தமது இருப்பைதக்கவைத்துக் கொள்வதற்கும் ஒட்டு மொத்தமான ஓர் இனப்படு கொலையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் முரண்பாடுகளைக் களையும் விதத்திலும் ஒரு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கும் சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை (Referendum) வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றிடம் கோருவதாக பக்கம் 02

## யாழ்ப்பாணக் குடும்பஸ்தர் பாரிஸில் அடித்து கொலை!



பாரிஸ், ஜூலை 27

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பக்கம் 02















## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழிறங்கிப் பேசுகின்றனர் என்று நேற்றுத் தான் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்குள்பிறிதொருதகவல்வெளிவந் திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட் டத்தில் இம்முறையும் களமிறங்கியி ருக்கின்றார். அங்கு தொன்மையான – புவனேகபாகு மன்னனின் கால – கட்ட டம் ஒன்று தகர்க்கப்பட்டமையால் எழுந் துள்ள சர்ச்சை தெரிந்ததுதான்.

அந்தத் தொன்மையான கட்டடம் தகர்க்கப்பட்டமை தொடர்பில் பிரதமர் மஹிந்தவின் நிர்வாகம், அவரது ஆள் கள்மீதுதான் வசைமாரி பாடப்படுகின்றது.

இவை தொடர்பில் அரசியல் ரீதியாக நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ராஜ பக்ஷ, வழமைபோல விவகாரத்தை இன ரீதியாகத் திசை திருப்பித் தாம் பிழைக் கப் பார்க்கின்றார்.

பாவம், புவனேகபாகு மன்னன். மஹிந்தவை அரசியல் நெருக்கடியிலி ருந்து பாதுகாப்பதற்காக அவர் அபவாதம் சுமக்க வேண்டியவராகின்றார்.

இந்த முறை பேரினவாதத் தலைவர் தப்புவதற்கான இனவாதப் பேச்சு சிறு பான்மையினரான தமிழர்கள் மீது அல்ல. மற்றொரு சிறுபான்மையினரான முஸ் லிம்களின் மீது.

புவனேகபாகு மன்னனின் அந்தப்புரத் தில் பல மனைவிகளில் ஒருவராக இருந் தவர் ஓர் இஸ்லாமியப் பெண்ணாம். அதனால்தான் அவரது கட்டடத்துக்கு இந்தக் கதி என்ற சாரப்பட நாட்டின் தலை வர் ஒருவர் திருவாய் மலர்ந்திருக்கின்றார்.

தென்பகுதி அரசியல் தலைவர்கள் அரசியல் ரீதியில் நெருக்கடிகளை எதிர் கொண்டு மேலெழும்புவதாயின் அதற்கு சிறுபான்மைத் தரப்பு ஒரு பலிக்கடா ஆகுவது தவிர்க்க முடியாதது போலும்.

★ ★ ★

தென்னிலங்கையில் மட்டுமல்ல, வடக்கிலும் இந்தக் கொச்சைப்படுத்தல் பேச்சு இடம் பெறாமல் இல்லை.

நேற்று வவுனியாவில் ஆவேசப் பேச்சு ஒன்றை முழங்கிய தமிழ் மக்கள் தேசி யக் கூட்டணியின் பேச்சாளர் சிவாஜிலிங் கம் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டைக் குறிப்பிட்டுக் கொஞ்சம் கொச் சைத்தனமாகப் பேசினார்.

*"இந்த வீட்டில் சாராயத் தவறணை நடந்து கொண்டிருக்கின்றது. இங்கே இருக்கின்ற வேட்பாளர்கள் சாராயத் தவ றணையை நடத்திக் கொண்டிருக்கின் றனர். அங்கே விபசாரம் நடக்கின்றது. அப்படியானால் வீட்டையும் உடைத்து இவர்களை ஊரை விட்டே ஓட ஓடத் துரத்த வேண்டும்."* – என்ற மொழியில் சிவாஜி பேசியமை ஓரளவு too much தான்...!

★ ★ ★

இந்தத் தேர்தலில் விளம்பரங்களுக் காக அதிகம் செலவு செய்தவர்களின் பட் டியல் ஒன்றை ஆங்கில வார இதழ் ஒன்று வெளியிட்டிருக்கின்றது.

அதன்படி முதலாமிடத்தில் இருப்பவர் சஜித் பிரேமதாஸா.

இரண்டாம் இடம் யாருக்குத் தெரி யுமா? சஜித்துக்கு மிக நெருக்கமாக, அதி களவில் செலவிடுவோர் யார் தெரியுமா?

நமது யாழ்ப்பாணத்து 'அமுலபேபி' யான அங்கஜன் இராமநாதன்தான்.

வாரியிறைக்கும் பணப் பிரச்சாரத் துக்கு யாழ்ப்பாணத்தார் இலகுவில் எடு படுவார்கள், அத்தனை தூரம் படித்த முட் டாள்கள் என்பதுதான் எமது பட்டறிவு. இதைக் கூறுவதற்காக யாரேனும் என் மீது கோபிக்கலாம். ஆனால் யாழ்.மக் களின் இந்த அறிவிலித்தனத்தை நல்ல முதலாக்கத் தெரிந்த அங்கஜன் இராம நாதன், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளத் தெரிந்த – தமிழர்களின் ஏமா ளித்தனத்தை நல்ல முதலாக்கிக் கொள் ளக் கூடிய – புத்திசாலி அரசியல்வாதி தான். இதில் சந்தேகம் இல்லை.

அரசு செய்த நிதித் திட்டங்களைத் தன் னுடையவையாகக் காட்டி தினசரி விழா நடத்தியமையைப் பார்த்து ஏமாளியாவது யாழ்.பொதுமக்களின் பண்பியல்பாக இருக்கையில் அவர்களின் தலை மீது அவர் மிளகாய் அரைப்பதில் தப்பு ஏதும் இல்லைத்தானே...!

–மின்னல்–

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுத் திட்டப்பாதையை வலுவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் ஆணை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

திருகோணமலையில் நேற்று நடை பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:

–இன்று எமது முயற்சியின் காரண மாக நாங்கள் அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள அரசியல்வாதிகளையும் முக்கிய இராஜதந்திரிகளையும் சந்தித் துப் பேச்சு நடத்தியதன் காரணமாக ஐக் கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை யில் இலங்கை மீது தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. இலங்கை அரசு அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு, அதனை அமுல்படுத்துவதாக உறுதி யளித்தது. ஆனால், அதனை இதுவரை யும் நிறைவேற்றவில்லை.

இந்தச் சூழ்நிலையில் குறித்த தீர்மா னங்களை நிறைவேற்றுவதற்கு சர்வ தேசம், இலங்கை அரசுக்குக் கூடிய அழுத் தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

எமது மக்கள் ஓரணியாகத் திரண்டு தமது ஆணையை எமக்குத் தர வேண் டும். ஒரு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்து வதற்கு – ஐ.நா. தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றுவதை இனியும் தாமதப்படுத் தாமல் இருப்பதற்கு – நாங்கள் பெரும் பலமான அணியாக நாடாளுமன்றம் செல்ல வேண்டும் – என்றார்.

## முன்னணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

அதனைத்தொடர்ந்து தேர்தல் விஞ் ஞாபனம் குறித்துக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்க மளித்தார். (விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்...)

## பொதுவாக்கெப்பைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையி லான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர் தல் விஞ்ஞாபனம் நீதியரசர் விக்னேஸ்வர னினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. (விரிவான செய்தி 6ஆம் பக்கத்தில்...)

## யாழ்ப்பாணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸில் அடித்துக் கொல்லப்பட்டுள் ளார்.

பாரிஸ் – லாக்கூர்நெவ் பகுதியில் வசித்துவந்த ஜெயசுதன் தியாகராஜா (வயது –43) என்பவரே கொல்லப்பட்டுள் ளார். இவர், யாழ்ப்பாணம் – தொண்டமா னாற்றைச் சேர்ந்தவர்.

வீட்டு வாடகை தொடர்பில் வீட்டு உரி மையாளருடன் பிரச்சினை ஏற்பட்டதை தொடர்ந்து, கடந்த புதன்கிழமை வீட்டு உரிமையாளரின் நண்பர்கள் சிலரால் அவர் தாக்கப்பட்டு, அங்கிருந்து வெளி யேற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் காயங்களுடன் வீதி யில் நின்ற அவரை, பொலிஸார் பொறுப் பேற்று, வைத்தியசாலையில் அனுமதித் துள்ளனர்.

அதன்பின்னர் அந்த நபரின் சடலம் வியாழக்கிழமை அவரது வீட்டில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டதாக வீட்டு உரி மையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அந்த நபர் குடியிருந்த வீடு, உரிமையாளரால் பூட்டப்பட்டிருந்த நிலையில் எவ்வாறு மீண்டும் வீட்டுக்குச் சென்றார் என்பது குறித்தும் ஆராய்ந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபரின் நெருங்கிய உறவினர்கள் எவரும் பிரான்ஸில் இல்லை எனவும், அவரது மனைவி இலங்கையில் வசிக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசா ரணையை முன்னெடுத்துள்ளனர்.

# குழந்தைகளில் ஈரல் மாற்றுவதற்கான முதல் சத்திர சிகிச்சை பெரு வெற்றி



இலங்கையில் முதன் முதலாக மேற் கொள்ளப்பட்ட குழந்தைகளுக்கான ஈரல் மாற்று சத்திர சிகிச்சை பெரும் வெற்றி யளித்துள்ளது எனக் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை தெரிவித்துள் ளது.

ராகமை ஈரல் மாற்று சத்திர சிகிச்சை குழுவுடன் இணைந்து, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் வைத் திய நிபுணர்களினால் இந்தச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசேட சத்திர சிகிச்சை நிபுணர் வைத் தியர் ரொஹான் சிறிவர்தனவும், அவரு டன் நாடளாவிய ரீதியிலுள்ள விசேட சத் திர சிகிச்சை நிபுணர்களும் இணைந்து கடந்த 14ஆம் திகதி இந்தச் சத்திரசிகிச் சையை மேற்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 09 வயது டைய சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட இந்தச் சத்திர சிகிச்சை 12 மணித்தியாலங் களுக்கும் மேலாக நீடித்தது.

குறித்த சிறுமியின் ஈரல் இயக்கத் தில் ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து, அச் சிறுமியின் தாயிடமிருந்து பெறப்பட்ட ஈர லின் பகுதியிலிருந்து குறித்த ஈரல் மாற்று சிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

உயிருள்ள ஒருவரிலி ருந்து ஈரல் எடுக்கப்பட்டு இலங்கையில் மேற்கொள் ளப்பட்ட முதலாவது சத்திர சிகிச்சை இதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இவ் வைத்தியசாலையில் வயதானவர்களுக்கான ஈரல் பொருத்தும் 50 சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் முதற் தடவையாக சிறுமி ஒருவருக்கு இந்த சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சத்திர சிகிச்சை மேற் கொண்ட நிபுணர்கள் குழுவினர் செய்தி யாளர்கள் மாநாடொன்றை நடத்தி அது தொடர்பில் தெரிவிக்கையில்,

சிறு வயது முதலே ஈரல் பாதிப்பால் கஷ்டப்பட்ட நிானு என்ற சிறுமி யாழ்ப்பா ணம் மாவட்டத்தில் மிகக் கஷ்டமான கிராம மொன்றைச் சேர்ந்தவர். அவரது 38 வயதான தாயார் அது தொடர்பில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் சிறு வர்களுக்கு ஈரல் பொருத்தக் கூடிய பிரி வுகள் இல்லாத காரணத்தால் யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த வைத்தியர்களான துாநதன் மற்றும் கே.அருள்மொழி ஆகி யோர் மேற்படி சிறுமியை கொழும்பு வடக்கு வைத்தியசாலையில் சேர்த்து வெற்றிகரமாக இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத் தமை குறிப்பிடத்தக்கது – என்றனர்.

# மேலதிகமாக ஒன்றரை இலட்சம் வாக்குகள் பெறுவாராம் மைத்திரி

### அவரே இப்படிப் பீற்றுகின்றார்



ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெற வுள்ள தேர்தலின் முடிவைத் தான் இப் போதே கூறுகிறார் எனத் தெரிவித்த முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தாம் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகப்ப டியான மேலதிக வாக்குகளைப்பெற்று, தேர்தலில் வெற்றிபெறவுள்ளார் எனத் தெரிவித்தார்.

பொலன்னறுவையில், நேற்று நடை பெற்ற மக்கள் சந்திப்பிலேயே, அவர் இவ் வாறு தெரிவித்தார்.

## நிரந்தர அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வு குறித்த நகர்வுகள் மற்றும் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் குறித்து கருத்துகளை முன்வைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:–

உலகில் இன்று ஒற்றையாட்சி, சமஷ்டி என்ற பதங்கள் மாற்றம் பெற்றுவிட்டன. ஆரம்பத்தில் இருந்த கொள்கைகள், வரை விலக்கணம் என்பன இன்று இல்லை. சர்வதேச சட்டத்தில் அவ்வாறான வரை விலக்கணம் எதுவுமே இல்லை.

எனவே, பெயர் பலகைகளை வைத் துக்கொண்டு எவரையும் ஏமாற்ற முடியாது. ஏமாற்றவும் கூடாது.

இன்று ஆட்சியாளர்கள் சமஷ்டி என்ற காரணத்தைக் கூறிக்கொண்டு தமது அரசியல் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், நாம் எமது நிலைப்பாடுகளைப் பலப்படுத்தி வரு கின்றோம். இதுவரை காலமாக நாம் பெற் றதை நழுவவிடக்கூடாது, ஏனையவற்றை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வரும் வேளைகளில் அவற்றைப் பெற்றுக் கொள்ள நாம் முழுமையான நடவடிக்கை எடுப்போம்.

அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்ள நாம் அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும் பான்மை ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம் எனகே கூறியதன் நோக்க மும் அதுவே.

எமக்கு அரசியல் தீர்வு வேண்டும். அதனை யார் வழங்கப்போகின்றனர் என் பது எமக்கு முக்கியமல்ல. தமிழர்களுக் கான நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். அதனைப் பெற்றுக்கொள்ள சூட்சுமமா கவும் நாம் செயற்பட்டாக வேண்டும்.

அரசியல் தீர்வை இலகுவான விடய மாக நினைக்கவும் கூடாது. ஆனால், ஆட் சியாளர்கள் புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவது குறித்த தீர்மானம் எடுத் துள்ளனர்.

எனவே, அதனை நாம் பயன்படுத் திக்கொள்ள நினைக்கிறோம். எமது முயற் சியில் தீர்வு கிடைக்குமென்றால் நான் எனது அரசியல் வாழ்க்கையை முடித் துக்கொள்ளவும் தீர்மானம் எடுத்துள் ளேன். அதில் மாற்று முடிவுகள் எதுவும் இல்லை. நான் கூறுவது ஒன்றுதான். அரசியல் தீர்வு விடயத்தில் இந்த அரசு முன்வைக்கும் விடயங்களை சிங்கள மக் கள் ஏற்றுக்கொள்வார்கள். அதுமட்டும் அல்ல, ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனா திபதி மற்றும் பிரதமர் இந்தியாவுக்கே சென்றனர். அதன்போது அரசியல் தீர்வு குறித்து அரசுக்கு அழுத்தங்களை இந் தியத்தரப்பினர் கொடுத்துள்ளனர். எனவே, சந்தர்ப்பங்கள் வருகின்றன. அது எவ்வா றான சந்தர்ப்பமாக இருந்தாலும் அதனை நாம் எமக்குச் சாதகமாகப் பயன்படுத் திக்கொள்ளவே முயற்சிக்கின்றோம் – என்றார்.

# புதிய அரசமைப்பு இன்றேல் தோற்றுப்போகும் இலங்கை

## அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை





**(அப்துல் சலாம் யாசீம்)**

இலங்கையில் தற்போது அரசமைப்பு சட்டபூர்வமாக இல்லை. இந்த நிலைமை தொடருமானால் இலங்கை சர்வதேச ரீதியில் தோல்வி அடைந்த நாடாகக் கருதப்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இளைஞர் அணியினரின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 65 வருடங்களாக அரசமைப்பை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. 1994 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள மக்களும் தேர்தல்களில் அரசமைப்பை நிராகரித்து வந்துள்ளனர்.

அரசமைப்பு என்பது மக்களுடைய சம்மதத்துடன் மக்களின் ஒப்புதலுடன் மக்களின் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தற்போது இந்த நாட்டில் சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலும், ஐக்கிய நாடுகள் சபையினுடைய ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் இலங்கையில் ஓர் அரசியல் சாசனம் இல்லை.

சிறந்த அரசியல் தீர்வை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் 90 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்ற நிலையில் நூற்றுக்கு 80 வீதமான தமிழ் மக்கள் வீட்டுச்சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

தமிழ் மக்களுடைய வாக்குகள் பிரிக்கப்படக்கூடாது. மாற்றுக் கட்சிகளுக்கு வாக்குகளை அளிக்காமல் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைப் பெறக்கூடிய வகையில் தமிழ் பேசும் மக்கள் வீட்டு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். அனைத்து இளைஞர்களும் ஒன்றிணைந்து மக்களை அறிவூட்டுவதுடன் தெளிவூட்ட வேண்டும் - என்றார்.

## துணை வேந்தர் தேர்வு ஒகஸ்ட் 12 ஆம் திகதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தரிற்கான தேர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஆறு பேர் விண்ணப்பத்திருந்தனர். இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் இருந்தே ஒருவரை துணை வேந்தராகத் தேர்வு செய்ய வேண்டும்.

இதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பேரவையில் உள்ளோர் வாக்களித்து தேர்வு செய்யும் முறைமை எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதனை நடத்துவதற்காக மதிப்பீட்டாளர்கள் என நால்வர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் 2019 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியின் நிர்வாகத்தின் கீழேயே இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அரசமைப்புக் கூத்துக்கள்

**இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பு சட்டபூர்வமானதாக இல்லை. இந்த நிலைமை தொடருமானால் இலங்கை சர்வதேச ரீதியில் தோல்வியடைந்த நாடாக – தோற்றுப்போன நாடாக – கருதப்படும் நிலைமை நேரும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கின்றார்.**

**புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் கடந்த நான்கு வருடங்களாக அல்லும் பகலும் பாடுபட்ட ஒரு மனிதர், அந்த முயற்சி வெற்றி பெறாத ஆதங்கத்தில் எரிச்சலுடன் இதனைக் கூறினாலும், இந்தக் கருத்தில் அர்த்தங்கள் ஆயிரம் உள்ளன.**

**நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த முயற்சிகளை இன்று பெரிதும் குறை கூறும் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட இன்றைய ஆளும் தரப்பினரை உள்ளடக்கிய முன்னைய நாடாளுமன்றமே புதிய அரசமைப்பு உருவாக்க சபையாக – அரசமைப்புக் கவுன்ஸிலாக – கூடி இந்தத் தீர்மானத்தை முன்னெடுத்து, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டது.**

**அந்தத் தீர்மானத்தை – அதன் மூலம் புதிய அரசமைப்பு உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சியை – தற்போது கண்மூடித்தனமாக எதிர்க்கும் மஹிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ போன்ற நாடாளுமன்றத்தின் முழு உறுப்பினர்களினதும் – 225 உறுப்பினர்களினதும் – இணக்கத்துடன்தான் அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.**

**அந்த நடவடிக்கையில் சம்பந்தன் முழு மூச்சாக ஈடுபட்டார்.**

**நாடாளுமன்றம் அரசமைப்பு உருவாக்கப் பேரவையாக மாறிய பின்னர் நாள் கணக்கில் நடத்திய விவாதங்களில் எல்லாம் தமிழர் தரப்பில் அவரும் சுமந்திரனும் தவறாது கலந்து கொண்டனர்.**

**அரசமைப்பு உருவாக்கத்துக்காக ஒரு வழிகாட்டல் குழு அமைக்கப்பட்டது. அது 83 தடவைகள் கூடியது. அவற்றில் 82 கூட்டங்களுக்கு சம்பந்தனும், சுமந்திரனும் தவறாது பங்கு பற்றி அவ்விடயத்தில் தமது ஈடுபாட்டையும், பங்களிப்பையும் உறுதி செய்தனர். இரண்டு வெவ்வேறு அமர்வுகளில் ஒன்றுக்கு சுமந்திரனும், மற்றையதுக்கு சம்பந்தனும் சமுகம் தரவில்லை.**

**அவ்வளவு தூரம் இவ்விடயத்தில் இருவரினதும் முழுப் பங்களிப்பும் இருந்தன. இந்தப் பங்களிப்பின் பின்னரும், அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சி அப்படியே படுத்துவிட்டது. அரசு மாற்றத்துடன் அந்த முயற்சி செத்தும் போய்விட்டது.**

**தற்போது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பு சட்டவிரோதமானது, சட்டரீதியானது அல்ல என்று சம்பந்தன் கூறியவற்றிலும் அர்த்தங்கள் பொதிந்துள்ளன.**

**1972 இல் கொண்டு வரப்பட்ட இலங்கையின் முதலாவது அரசமைப்பாக இருக்கட்டும் –**

**அல்லது 1978இல் கொண்டு வரப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய அரசமைப்பாக இருக்கட்டும் –**

**இரண்டுமே தமிழ் மக்களின் அனுமதியுடன், அல்லது அவர்களின் ஈடுபாடு, பங்களிப்புடன் உருவாக்கப்பட்டவையல்ல. தமிழ் மக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டவை அவை.**

**இந்த இரு அரசமைப்பு உருவாக்க முயற்சிகளிலும் தமிழர்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. அவர்களின் யோசனை, கருத்துக்கள் அந்த அரசமைப்பு உருவாக்கத்தின் போது உள்வாங்கப்படவேயில்லை.**

**தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட திட்டங்கள், யோசனைகள் அந்த இரண்டு அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் போதும் பரிசீலனைக்குக் கூட எடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டன.**

**அந்த வகையில் பார்த்தால் தமிழர் தேசம் என்ற மக்கள் கூட்டத்தின் மீது அடுத்தடுத்துப் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட இரண்டு ஆக்கிரமிப்புச் சட்டங்களே அவர்களை அரசமைப்பு என்ற பெயரில் கட்டுப்படுத்தி நிற்கின்றன.**

**தென்னிலங்கைச் சிங்கள தேசம், தமிழர்களின் இணக்கமின்றி அவர்கள் மீது பலவந்தமாகத் தான் திணித்த ஒரு கட்டுப்பாட்டு விதிகளை அரசமைப்புச் சட்டமாகக் காட்டி அவர்களை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தி நிற்கின்றது என்பதையே சம்பந்தர் சுட்டுகின்றார்.**

**அதனால்தான் இந்த நாட்டில் சட்ட பூர்வமான அரசமைப்பு இல்லை என்றும் –**

**இந்த நிலைமை நீடிக்குமானால் இலங்கை சர்வதேச ரீதியில் தோல்வியடைந்த நாடாக (Failed State ) கருதப்படும் என்றும் சம்பந்தன் தெரிவிக்கின்றார்.**

**தற்போதைய ராஜபக்ஷ அரசும் பொதுத்தேர்தலின் பின்னர் அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டத்தில் இருப்பதைச் சுட்டிக் காட்டும் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் அதை எமக்குச் சாதமாகப் பயன்படுத்த முயல வேண்டும் என்று தெரிவிக்கின்றார்.**

**இந்த அரசமைப்பையாவது தமிழர் தேசத்தின் சம்மதம், இணக்கத்துடன் இயைந்து தென்னிலங்கைச் சிங்களதேசம் தயாரிக்கின்றதா அல்லது அதுவும் அதனை ஒரு தலைப்பட்சமாகத் தயாரித்து, தமிழர் மீது பலவந்தமாகத் திணிக்குமா?**

**பொறுத்திருந்து பார்ப்போம்.**

# அனுப்பும் எம்.பிக்களின் எண்ணிக்கையினால் நாம் இதுவரை சாதித்தவை எவையுமில்லை

## சரியானவர்களைத் தெரிவு செய்வதே முக்கியம் தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாடு இதுவே

தற்போதைய தேர்தல் தொடர்பில் 'யாருக்கு வாக்களிப்பது?' என்ற தலைப்பில் தமிழ் மக்கள் பேரவை தன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

70 வருடங்கள் கடந்தும் தொடர்ந்து கொண்டிருக்கும் எமது உரிமைப் போராட்டங்களிலே நாம் சுமந்த வலிகளும், இழப்புக்களும், வேதனைகளும் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் உயிர்கொடுத்து காத்து வரும் எமது அடிப்படை அபிலாஷைகள் போலிச் சலுகைகளுக்கும், பகட்டுக்கும் விலைபோகக்கூடியவை அல்ல.

நாம் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையால் இதுவரைகாலமும் நாம் சாதித்தது எதுவுமில்லை. எதிர்காலத்திலும் இந்த எண்ணிக்கையால் எமக்கு ஆகப்போவது எதுவும் இல்லை. ஆனால் அங்கு ஒற்றுமையுடனும், உறுதியுடனும் தெரிவிக்கப்படும் எமது நிலைப்பாடுகளும், கருத்துக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது நாம் எத்தனை பிரதிநிதிகளை அனுப்புகின்றோம் என்பதிலும் பார்க்க என்ன நிலைப்பாடுடையவர்களை அனுப்புகின்றோம் என்பதே முக்கியத்துவமாகின்றது.

கொள்கை ஒன்றான கட்சிகளிடையே கூட கருத்து வேற்றுமைகள் விதைக்கப்பட்டு உரமூட்டி வளர்க்கப்படுகின்றன. ஒரு கட்சிக்குள்ளே கூட ஒற்றுமையற்ற தன்மையும் சுயநலப்போக்கும் வெளிப்படையாகத் தெரிவது வேதனையானது. இந்தப் பிரிவுகள் கண்டு நாம் சோர்ந்துபோய்விட முடியாது. தேர்தல் அரசியல் கடந்து பொதுமக்களாகிய எமது ஒன்றிணைந்த அழுத்தங்கள் ஒற்றுமையான ஒரு தூய அரசியல்பாதைக்கு வித்திடும்.

எமது அபிலாசைகள் என்ன என்பதை தமிழ் மக்கள் பேரவையினராகிய நாம் தீர்வுத்திட்டமாக எழுத்துருவில் வடித்து வெளியிட்டிருந்தும், அதன் அடிப்படைகளை இதயசுத்தியுடன் வலியுறுத்த திராணி அற்றவர்களை எமது பிரதிநிதிகளாக தெரிவுசெய்ய முடியாது. எமது பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக உணராதவர்களால் பிரச்சினைகளை நியாயபூர்வமாக அணுகமுடியாது. நாம் எமது பொது நோக்கங்களை கருத்தில் கொள்ளாது சுயலாபத்திற்காக வாக்களிப்போமாக இருந்தால், நாம் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளும் சுயநலத்திற்காக இயங்குவதைத் தடுக்கமுடியாது போய்விடுவதுடன் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களும் எமது கருத்துக்களாக கொள்ளப்படும் அபாயம் இருக்கின்றது.

எம் வாக்குகளை பெற்று நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்பதற்குப் பதிலாக இனி வாக்களித்தபின் நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று சிந்திப்போம், செயலில் இறங்குவோம். வாக்களித்து விட்டு உறங்கிக் கொண்டிருக்க முடியாது. எங்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படும் எமது பிரதிநிதிகளை ஒற்றுமையுடன் நெறிப்படுத்தி வழிப்படுத்தும் பாரிய பொறுப்பு பொதுமக்களாகிய எங்களுக்கு இருக்கிறது. தற்போது மாற்றம் பெற்றுவரும் சூழ்நிலைகளால் உலக வல்லரசுகளின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. அவர்களின் கவனம் எம்மை நோக்கித் திரும்பும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அவ்வேளையிலே எமது உறுதியான ஒருமித்த நிலைப்பாடுகள் முக்கியத்துவம்பெறும். எனவே எமது அபிலாசைகளை உள்வாங்கி, புரிந்துணர்வுடன் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் விடயங்களை அணுகி அதை முன்னகர்த்தக்கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்வது எமது வரலாற்றுக் கடமையாகும்.

எமது வாக்குரிமை பலத்தைக் காட்டவும், விலை போன வாக்குகளை செல்லாக்காசாக்கவும், வாக்களிப்பு வீதத்தினை அதிகரிக்க முழுமுயற்சி எடுப்போம். சரியான பிரதிநிதிகளை தெரிவுசெய்ய தவறாது சென்று வாக்களிப்பதுடன் எமது மூன்று (03) விருப்புவாக்குகளையும் பதிவிடுவோம். எமக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களின் பெயரால் உண்மையாகவும் ஒற்றுமை உணர்வுடனும் நேர்மையாகவும் தூய அரசியலை முன்னெடுத்து எமது நிலைப்பாடுகளை அஞ்சாது வலியுறுத்தி முன்னேறக் கூடியவர்களை எமது பிரதிநிதிகளாக தெரிவு செய்வோம். எமக்கு தற்காலிகமாக வழங்கப்படும் சலுகைகளுக்காகவும் இலஞ்சத்திற்காகவும் எமது கடமையிலிருந்து விலகிவிட முடியாது.

தேர்தல் அரசியல் கடந்து எமது அபிலாசைகளுக்காய் ஒன்றுபட்டு உழைக்கும் ஒரு தளத்தை உருவாக்குவோம். அதற்காக ஒன்றிணைவோம். - என்று உள்ளது.

# திருகோணமலையில் வான் – லொறி விபத்து

## இருவருக்குப் படுகாயம்



திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மாலை வான் ஒன்றும் லொறியொன்றும் மோதியதில் இரண்டு பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள சீனக்குடா விமான படைத்தளத்திற்கு அருகில் அமைந்துள்ள பம்பறாஹவுஸ் (பம்பறாகேவ்) வளைவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செருப்பு, தலைக்கவசத்துடன் வீதியில் ஆணின் சடலம் மீட்பு

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேனை பொல்பிட்டிய பகுதியில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொல்பிட்டிய சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகாமையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீதியில் சடலம் கிடப்பதைக் கண்டு பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலையடுத்தே குறித்த சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர். மரணமடைந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சடலத்துக்கு அருகில் தலைக்கவசம் ஒன்று இருக்கின்ற போதிலும், மோட்டார் சைக்கிள் எதுவும் அருகில் காணப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், குறித்த நபர் கையில் செருப்பை பிடித்தவாறு மரணித்துள்ளார் எனவும் கூறினர்.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டாரா? அல்லது வேறு ஏதும் காரணங்களால் இறந்துள்ளாரா? என்பது தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# நல்லாட்சி அரசும் ராஜபக்ஷ அரசும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

## போட்டுத் தாக்குகின்றார் ஞானசாரர்



கொழும்பு, ஜூலை 26

முன்னைய நல்லாட்சி ஆட்சியாளர்களைப்போன்று ராஜபக்ஷ அரசும் குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகின்றது. இந்த இரண்டு அரசுகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

- இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடம் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஒப்படைப்பதற்கு அவர் கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான திட்டம் இந்த அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ முன்வைத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுகளை மேற்கொள்வதற்குத் தொழிற்சங்கத்தினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தின் 49 வீதத்தை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெயர் தெரியாத இரு நிறுவனங்களுக்கு 51வீதத்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நிறுவனங்களின் பெயர்கள் தெரியாமல் எப்படி அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்கலாம் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பழைய வழிமுறைகளைப் பின்பற்றக்கூடாது என்பதற்காகவே இந்த அரசுக்கு மக்கள் அதிகாரத்தை வழங்கினார்கள் என்று தெரிவித்துள்ள ஞானசார தேரர், எனினும் இந்த அரசும் முன்னைய அரசு போலவே செயற்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவர்களை துஷ்பிரயோகப்படுத்தி காணொலி எடுத்து வந்த ஆசிரியர்

நீண்ட நாள்களாக சிறுவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி அதனை காணொலி எடுத்து வந்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுபிட்டி பொலிஸா மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு மையத்தின் அதிகாரிகள் ஊடாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தனியார் வகுப்புக்களை நடாத்தும் ஆசிரியர் எனவும் தெரியவந்துள்ளது.

சுமார் 10 வருடங்களாக அவர் இவ்வாறான துஷ்பிரயோகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை குறித்த நபரினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட 3 சிறுவர்கள் நேற்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் சிறுவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி அவர் எடுத்த காணொலிகள் சிலவற்றையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

## அரச அதிகாரிகள் பக்கச்சார்பு: நீதியான தேர்தலுக்குப் பாதிப்பு

### பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 26

அரச அதிகாரிகள் பக்கச்சார்பான விதத்தில் நடந்து கொள்கின்றார்கள் என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) குற்றஞ்சாட்டியுள்ளது.

சில உயர் அரச அதிகாரிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் பரப்புரை நடவடிக்கைகளில் பங்கெடுப்பது குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பவரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கள் எண்ணப்படும் நிலையங்களில் முக்கிய பதவிகளை வகிக்கக்கூடியவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்வதும் ஆதரிப்பதும் சுதந்திரமான நீதியான தேர்தலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

தேர்தல் ஆணைக்குழு மேற்பார்வை மற்றும் நிறைவேற்று தரத்தில் உள்ள அதிகாரிகள் பரப்புரையில் ஈடுபடக்கூடாது; வேட்பாளர்களை ஆதரிக்கக்கூடாது. ஆனால், விதிமுறை மீறப்படுகின்றது.

இந்த விதிமுறையை மீறும் அதிகாரிகள் சுதந்திரமான - நீதியான தேர்தலுக்கு உதவ வேண்டும் - என்றார்.

## மாகாண சபை முறைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

### மிலிந்த மொறகொட வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 26

பொதுமக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்காக மாகாண சபை முறைமையை உடனடியாக நீக்கவேண்டும்; உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாவைரஸுக்குப்பின்னரான உலகத்தைக் கையாள்வதற்கு இலங்கைக்கு வலுவான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸின் ஆரம்ப நாள்களில் வலுவான நிறைவேற்று அதிகாரத்தின் தீர்மானம் எடுத்தல் காரணமாக நாடு நன்மையடைந்தது என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. இதன் காரணமாகப் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

தீர்க்கரமான விதத்தில் செயற்படும் ஆனால் இறுதியில் நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்கும் கடப்பாடு உள்ள வலுவான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்துவது குறித்து சிந்தனை ஆற்றலுடைய இலங்கையர்கள் அனைவரும் ஆராய வேண்டும்; கலந்துரையாட வேண்டும்; பரப்புரை செய்யவேண்டும்.



அனைத்து இலங்கையர்களாலும் தெரிவு செய்யப்படுபவர் ஜனாதிபதி மாத்திரமே. இந்தப் பதவியில் உள்ளவர் அனைத்துப் பிரஜைகளுக்கும் பதிலளிக்கும் கடப்பாடு உள்ளவராகக் காணப்பட வேண்டும்.

பொதுமக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக மாகாண சபை முறைமையை உடனடியாக நீக்கவேண்டும். உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த வேண்டும் - என்றார்.

## 5,600 போதை வில்லைகளுடன் கொழும்பில் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 26

கொழும்பிலுள்ள கலதாரி ஹோட்டலுக்கு அருகில் 2.4 கிராம் ஹெரோயின் மற்றும் 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகளுடன் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் புறக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, குறித்த பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.50 மணியளவில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் இச்சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வத்தளை மற்றும் அங்கொடை பிரதேசங்களைச் சேர்ந்த 20, 29 வயதுடைய சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை புறக்கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் எடுத்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம், புறக்கோட்டை பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'பேஸ்புக்' மோட்டார் பந்தயம்: கெஸ்பேவவில் 39 பேர் கைது!

### 27 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

பிலியந்தலை, கெஸ்பேவ பகுதியில் முகநூல் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 39 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 27 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் 20 முதல் 22 வயதுக்குட்பட்டவர்களாவர்.

விசாரணையின் பின்னர் அவர்களை கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை கோருகின்றது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி



## நேற்று வெளியிடப்பட்ட அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது 13 குற்றச்சாட்டுகள்

இலங்கையில் தமிழ் மக்கள் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும் ஒட்டுமொத்தமான ஒரு இனப்படுகொலையில் இருந்து தம்மைப் பாது காத்துக் கொள்வதற்கும் முரண்பாடுகளைக் களையும் விதத்திலும் ஒரு நிரந்தர தீர்வினை பெற்றுக் கொள்வதற்கும் சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை **(Referendum)** வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றிடம் கோருவதாக நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நீதியரசர் விக்னேஸ்வரனினால் வெளியிட்டுக்கு வைக்கப் பட்டது.

வடகிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்தின் சில இடங்களிலும் வாழ்ந்து வந்த இலங்கையின் தமிழ் சமூகமானது இடைக்கற்காலம், பெருங்கற்கால மக்களின் ஒன்று கலப்பில் இருந்து தோன்றியவர்கள். இடைக்கற்கால கலாசாரமானது கிறிஸ்துவுக்கு முன் 28,000 வருடகால நீண்ட இருப்பைக் கொண்டது என்று ஆரம்பிக்கும் இலங்கையில் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்றை ஆதார தகவல்களுடன் வெளிப்படுத்தும் ஓர் அறிமுகக் குறிப்புடன் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் ஆரம்பிக்கிறது. இந்த அறிமுகக் குறிப்பினை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற சரித்திரப் பேராசிரியர் மற்றும் யாழ் பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன் வழங்கியிருக்கிறார். இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றின் முக்கிய சம்பவங்களை குறிப்பிடும் நீண்ட ஒரு வரலாற்று குறிப்பும் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் ஒரு தேசம், இலங்கையின் வடக்கு, கிழக்கு அவர்களின் மரபுவழித் தாயகம், பராதீனப் படுத்த முடியாத சுயநிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்பவற்றின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் இறைமையுடனான உயர்ந்த மட்ட சுயாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெற்றுக்கொள்வதே தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நோக்கம் என்றும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுகின்றபோது இருக்கக்கூடிய பல தெரிவுகளில் இந்த சமஷ்டி தீர்வும் ஒரு தெரிவாக இருக்கும் என்றும் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதேவேளை, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் இறுதி தீர்வை எட்டும்வரை யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீள கட்டியெழுப்புவதற்காக ஓர் இடைக்கால தீர்வினை சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன் ஏற்படுத்துவதற்கு அரசியல், ராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூகம் – குறிப்பாக முன்னைய சமாதான பேச்சுக்கு அனுசரணை வழங்கிய இணைத்தலைமை நாடுகள் ஆகியவை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு அவற்றுக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வைப்பெற ஆராயும் விதத்தில் சர்வதேச நாடுகளின் முன்னிலையில் இலங்கை அரசாங்கம் இணங்கியிருந்த நிலையில், இன்று விடுதலைப்புலிகள் இல்லை என்ற காரணத்துக்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தேவையில்லை என்று அவர்கள் தட்டிக் கழித்துவிடமுடியாதுஎன்று இந்தியா, சர்வதேச நாடுகள் மற்றும் ஐ. நா. ஆகியவற்றின்தார்மீகபொறுப்பை இந்ததேர்தல்விஞ்ஞாபனம் அழுத்தியுரைத்துள்ளது.



சமஷ்டிபோன்றஏற்றுக் கொள்ளக்கூடிய நேர்மையான எந்த ஓர் அரசியல் தீர்வினையும் இனப் பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்களுக்கு முன்வைப்பதற்கோ அல்லது கைச்சாத்திட்ட எந்த ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் மற்றும் இனப் படுகொலைகள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கோ இலங்கை அரசானது கடந்த 70 வருடங்களில் முழுமையாக தவறிவிட்டுள்ளதுடன் அவற்றுக்கு தயாரற்ற தனது தன்மையையும் உறுதிப்படுத்தியுள்ளது. அதேவேளை, அரசாங்கம் தனது அண்மைய நிலைப்பாடாக இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்றும் பொருளாதார பிரச்சினையே இருக்கிறது என்றும் மிகவும் திட்டவட்டமாக அறிவித்தும் விட்டது. இதன் காரணமாக, ஒரு நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியவற்றிடம் வேண்டுகோள் விடுப்பதை தவிர வேறு எந்தத் தெரிவுமே இல்லை – என்று சர்வஜன வாக்கெடுப்பை கோருவதற்கான தமது நியாயத்தை தமிழ் மக்கள் தேசிய கூட்டணி முன்வைத்துள்ளது.

எரித்திரியாவில் 1990 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து, கனடாவில் கியூபெக், கிழக்கு திமோர், தென் சூடான், கற்றலோனியா, ஈராக்கிய குருத்தி என்று பல நாடுகளில் சர்வதேச சமூகம் பிணக்குகள் மற்றும் தேசிய இனங்களின் அதிகாரங்களை தீர்மானித்துக்கொள்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியிருக்கின்றன. வடமாகாணசபையும் கிழக்கு மாகாணசபையும் ஏற்கனவே இத்தகைய ஒரு மக்கள் தீர்ப்பெடுப்பு வேண்டும் என்று தீர்மானங்களை எடுத்திருக்கின்றன. அத்துடன் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள 20 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இவ்வாறானதொரு மக்கட் தீர்ப்பெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற ஒரு மனுவில் கைச்சாத்திட்டிருக்கின்றார்கள். இந்தியாவின் தமிழ் நாடு அரசாங்கம் உட்பட உலகின் பல மாநகர சபைகளிலும் இவ்வாறான மக்கள் தீர்ப்பெடுப்பின் மூலமே இலங்கையில் தமிழ் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட முடியும் என்று தீர்மானங்களை எடுத்துள்ளனர். என்று குறிப்பிடும் இந்த தேர்தல் விஞ்ஞாபனம், இந்த அடிப்படையில் இலங்கையில் எத்தகைய ஒரு தீர்வு தமக்கு வேண்டும் என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்கும் வகையில் சர்வதேச சமூகம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்யவும், இனப்படுகொலையில் இருந்து பாதுகாப்பதற்கும், அடுத்த கட்டமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசென்று நடவடிக்கை எடுப்பதற்கு சட்டரீதியானதும் அரசியல் ரீதியானதுமான எல்லாவிதமான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதி ஆகியவை தொடர்பில் தனது நிலைப்பாட்டை இந்த விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச ரீதியான ஒரு....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கில் சிங்கள குடியேற்றங்கள் மற்றும் பௌத்த மயமாக்கலை நிறுத்துதல் ஆகியவை தொடர்பில் ஐ. நா மனித உரிமைகள் சபையில் தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை நிறுத்தும் தீர்மானம் ஒன்றை கொண்டுவருவதற்கு அல்லது ஏற்கனவே இருக்கும் தீர்மானத்தில் இது தொடர்பில் அழுத்தமான உள்ளீடு ஒன்றை கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்போவதாகவும் தொடர்ச்சியாக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பிலும் இராணுவ மயமாக்கல் நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஐ. நாவின் விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு ஐ. நா. சபை மற்றும் சர்வதேச நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் வாழ்க்கை சகஜ நிலைக்கு திரும்புவதற்கு இராணுவ வெளி யேற்றம் அவசியம் என்றும், 1983 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்த நிலைகளுக்குள் இராணுவம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பலவந்தமாகஜ் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகளைத் தீர்த்தல், பொருளாதாரம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்பு, பனை, தென்னை வள அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, முன்னாள் போராளிகள் மற்றும் மாற்று வலுவுள்ளோருக்கான நல்வாழ்வு, பெண்கள் மற்றும் விதவைகளுக்கான நல்வாழ்வு, உட்கட்டுமானங்களை அமைத்தல், விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை அபிவிருத்தி, சுகாதாரத்துறை விருத்தி, விளையாட்டு அபிவிருத்தி, வரலாறு, கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு மேம்பாடு, இளையோர்களை வலுவூட்டல், மலையக மக்களின் நல்வாழ்வு, இந்தியாவில் உள்ள எமது அகதிகளின் மீளக்குடியமர்வு, இந்திய மீனவர்களின் அத்துமீறல், எமது சர்வதேச உறவு ஆகிய உப தலையங்கங்களின் கீழ் அவை தொடர்பில் தனது நிலைப்பாடு மற்றும் அணுகுமுறைகளை தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விளக்கியுள்ளது.

தமது அணுகுமுறைகள் எவ்வாறு ஏனைய காட்சிகளில் இருந்து வேறுபட்டவை என்றும் சிறந்தவை என்றும் விளக்கம் அளித்துள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணி பதவி மோகம், சலுகை மற்றும் சரணாகதி அரசியல் செயற்பாடுகள் ஆகியவற்றுடன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சகல தோல்விகளுக்கும் தவறுகளுக்கும் மிக முக்கியமான மற்றொரு ஒரு காரணம் ஒரு சிலர் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுத்து செயற்பட்டமை ஆகும். அந்த தவறை நாம் விடப்போவதில்லை. எமது செயற்பாடுகள் நிறுவன ரீதியான கட்டமைப்புக்களின் ஊடாக நன்கு ஆராயப்பட்டு முன்னெடுக்கப்படவிருக்கிறது. நிறுவனமயப்படுத்தல் என்னும்பொழுது அரசியல் தீர்வு விடயம் சரி, சமூக, பொருளாதார மேம்பாடு சரி எதுவானதாக இருந்தாலும் அவற்றுக்கான செயற்பாடுகளின் நிலைத்துநிற்கும் தன்மையும் உபாயங்களும் தனி ஒருவரில் தங்கி இருக்காமல் அந்த நோக்கங்கள் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கூட்டுப்பொறுப்பிலும் பற்றுறுதியிலும் தங்கி இருத்தலாகும். இதன் அடிப்படையில், உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் புத்திஜீவிகளை ஒருங்கிணைத்து நிலத்திலும் புலத்திலும் கட்டமைப்புக்களை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம். நாம் மேலே குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே பெற்றுத்தரும். என்று குறிப்பிட்டுள்ளது.

எந்தக் கட்சியையும் விமர்சனம் செய்வது தமது நோக்கம் அல்ல என்றும் ஆனால், தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் மிகுந்த விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த 11 வருடங்களில் செய்த கீழ்வரும் 13 முக்கிய தவறுகளை சுட்டிக்காட்ட விரும்புவதாகவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது :

1. ஐ. நா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை மேலும் வலுப்படுத்தி இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை ஒன்றை ஏற்படுத்துவதற்கு மிகவும் பலம்பொருந்திய, வாய்ப்புக்கள் நிறைந்த எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைத்தபோதும் அவ்வாறு செய்யாமல் போர் குற்றத்துக்கான சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாக பிரசாரம் செய்ததுடன் ஐ. நா மனித உரிமைகள் சபை தீர்மானத்துக்கு கால அவகாசத்தை பெற்றுக்கொடுத்து இறுதியில் அதனை பலவீனப்படுத்தியமை. இதன்மூலம் இனப்படுகொலை குற்றவாளிகளை ஐ. நா மனித உரிமைகள் சபையில் தண்டனையில் இருந்து பாதுகாத்ததுடன் பரிகார நீதி ஊடாக தீர்வினை பெறுவதற்கான வாய்ப்பினையும் மழுங்கடித்தமை.

2. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை இனப்படுகொலை இல்லை என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்புரை செய்தமை.

3. வட - கிழக்கிலிருந்தான முற்றான இராணுவ வெளியேற்றத்தை சர்வதேச சமூகமும் மனித உரிமைகள் அமைப்புக்களும் வலியுறுத்திவந்த நிலையில் தனியார் காணிகளிலிருந்தான இராணுவ வெளியேற்றம் போதுமென்று கூறியமை.

4. கிழக்கு மாகாண சபையை காரணம் எதுவுமின்றி இன்னோர் சமூகத்திடம் கைமாற்றியமை (முஸ்லிம் காங்கிரஸிடம் கொடுத்தமை).

5. வடக்கு மாகாண சபையை இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றியமைக்காக தொடர்ந்து செயற்படவிடாமல் முடக்கியதுடன் முதலமைச்சர் நிதியத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்காமை.

6. வவுனியா வடக்கு முதல் முல்லைத்தீவு வரை நல்லாட்சியென்ற பெயரில் பாரிய சிங்கள குடியேற்றங்களும் இராணுவ குடியேற்றங்களும் ஏற்படுத்தப்படுவதற்கும் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதற்கும் உடந்தையாக இருந்தமை. இந்தக் குடியேற்றங்களை நிறுவுவதற்காக யுத்தம் நடைபெற்ற காலங்களை விடவும் மிகவும் பெருமளவு நிதி பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் அவற்றுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய ஒரு குற்றத்தை இழைத்துள்ளமை.

7. நாவற்குழி, வவுனியா வடக்கு வெடுக்கு நாறிமலை, திருக்கேதீஸ்வரம், கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகம், வலிகாமம் ஆகிய இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதற்கும் எமது தலைநகராம் திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டு பௌத்த கோவில் கட்டப்படுவதற்கும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு எந்த எதிர்ப்பையும் வெளியிடாமை.

8. ஓர் (இலங்கை) அரசு செய்யும் போர்குற்றத்தை மூடி மறைப்பதற்காக அவற்றை இனப்படுகொலையில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக, விடுதலைக்காகப் போராடிய இளைஞர்கள் செய்த குற்றங்களுடன் ஒப்பிட்டு சமன் செய்தமை.

9. இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கையின் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்குள் கொண்டு சென்று இனப்பிரச்சினை தீர்வுக்கான பிரத்தியேகமான பேச்சுவார்த்தை வழிமுறைகளை இல்லாமல் செய்தமை.

10. வராத ஒரு தீர்வுக்காக தமிழ்த் தேசியக் கோட்பாடுகளான வடக்கு கிழக்கு இணைப்பு, இறைமை என்பவற்றை கைவிட்டும் ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்திற்கு முதல் உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டும் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தியமை.

11. தேசிய நீக்க, உரிமை நீக்க அரசியலை மேற்கொண்டு 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் உரிமை அரசியலை சலுகை அரசியலாக மாற்றியமை.

12. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மற்றும் தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்கள் இலங்கையின் சிங்கக் கொடியை நிராகரித்தும் சுதந்திர தினத்தை கரி நாளாகத் தொடர்ந்து பிரகடனப்படுத்தியும் வந்த நிலையில் எதிர்க்கட்சி தலைமைப் பதவியை தக்க வைப்பதற்காகவும் சலுகைகளுக்காகவும் சிங்கக் கொடியை ஏற்று கையில் ஏந்தியதுடன் சுதந்திரதின நிகழ்வுகளிலும் கலந்துகொண்டமை.

13. பதினொரு வருடங்கள் தமிழ் மக்கள் வழங்கிய வாய்ப்புக்களை தமது பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் பயன்படுத்திய பின்னர், எதிர்வரும் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெறப்போவதாக தற்போது வெளிப்படையாக அறிவித்துள்ளமை.

# பச்சை இனவாதமும் வெறுப்புப் பரப்புரையும்!



- மாலிக் பத்ரி -

நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அண்மித்து வரும் நிலையில் தேர்தல் களம் பரப்புரைகளால் சூடுபிடித்து வருகின்றது. கொரோனா சுகாதார நடைமுறைகள் அரச தரப்பு மற்றும் எதிர்க்கட்சிகளாலும் மீறப்பட்டு வருகின்றன.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஒரே வியூகம் வெறுப்புப் பேச்சு என்பதைப் போல் இந்தத் தேர்தலில் இனவாதத்தைப் பச்சையாகவே தூண்டும் செயற்பாடுகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

அரசுக்கு இந்தத் தேர்தல் பல்வேறு வகையிலும் முக்கியமானது என்பதைப் போல் சிறுபான்மைச் சமூகங்களின் இருப்புக்கும் கௌரவமான வாழ்வுக்கும் இந்தத் தேர்தல் மிகவும் முக்கியமானது.

தென்னிலங்கையில் சிங்கள வேட்பாளர்கள் முஸ்லிம் கிராமங்களுக்கு பரப்புரைக்கு வரும்போது ராஜபக்ஷக்களைக் கடுமையாக விமர்சித்து முஸ்லிம்களின் உணர்வுகளை உசுப்பி விடுவதன் மூலம் வெற்றி பெறத் தேவையான குறைநிரப்பு வாக்குகளைக் குறிவைக்கின்றனர். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் இதனையே செய்கின்றனர். தெற்கில் செல்லாக் காசாக உள்ள முஸ்லிம்கள் அவர்களது குறைநிரப்புக்குப் பயன்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் போன்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் ஒவ்வொரு சிங்கள வீடாகச் சென்று பச்சை இனவாதத்தைப் பரப்புரை செய்தே வாக்குக் கேட்கின்றனர். மதுமாதவ அரவிந்த ஓர் உதாரணம். அவரது பரப்புரைப் பரிவாரத்தில் உள்ள பெண்கள் கூட முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஜி.எல்.பீரிஸ் தேர்தலுக்குப் பின்னர் அடிப்படைவாதத்தை ஒழிக்கும் வகையிலான புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்கின்றார்.

பிரதமரின் கையாள்கள் மன்னர் புவனேகபாகுவின் அரசவையை உடைத்ததை நியாயப்படுத்துவதற்கு முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சையே உத்தியாகக் கொள்கின்றார். புவனேகபாகு தனது அரண்மனையில் வைத்திருந்த வைப்பாட்டிகளில் ஒருவராக கலேபண்டார எனப்படும் செய்யது இஸ்மாயிலின் தாயை இழிவுபடுத்துவதன் மூலம் சிங்கள வாக்குகளைக் கோருகின்றார்.

விஜேதச ராஜபக்ஷ, உதய கம்மன்பில ஆகியோரும் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைப் பரப்பி வாக்குப் பிச்சை கேட்கின்றனர். தெற்கின் சிங்கள வாக்குகள் மூலமே ஜனாதிபதி தெரிவானார் என்பதைக் காட்டியது போல் தெற்கின் தனிச் சிங்கள வாக்குகளால் புதிய சிங்கள, பௌத்த நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது எனக் காட்ட வேண்டிய அரசியல் தேவை ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கான உத்தியாக வெறுப்புப் பரப்புரை கையாளப்படுகின்றது.

இதிலுள்ள மிக ஆபத்தான பக்கம் என்னவென்றால் ஆளும் தரப்புக்குக் குடைபிடிக்கும் ஊடகங்கள் அனைத்தும் இந்த வெறுப்புப் பரப்புரைகளையும் பேச்சுக்களையும் தீவிரமாகச் சந்தைப்படுத்துகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களையே வேட்டைக் கடாவாக நிறுத்தி தமிழர்களை வேட்டையாடுகின்றது சிங்களம்

## விசனிக்கின்றார் இலங்கைத் தமிழரசுப் பொதுச் செயலாளர்



வேட்டையாடுபவர்கள் வேட்டைக் கடாவைக் கொண்டு எவ்வாறு வேட்டையாடுவார்களோ அவ்வாறே சிங்களத் தேசியவாதம் எம்மவர்களையே தமிழர்கள் என்ற அடையாளத்தைக் கொண்டு மக்கள் முன்னே களமிறக்கியிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியத்தை வேட்டையாடுவதற்கு வேட்டைக் கடாவாக வந்திருப்பவர்கள் எவ்வாறு எம்மைக் காப்பாற்றப் போகின்றார்கள் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமாகிய கி. துரைராசசிங்கம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஏறாவூர் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களை எமது பூர்வீக நிலத்தில் சிறுபான்மையாக ஆக்குவதற்கு சிங்களப் பேரினவாதம் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. இதனைத் தடுப்பதற்காக குரல் கொடுத்தது, போராடியது, நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விடயங்களையெல்லாம் முன்வைத்தது, முன்வைத்துக் கொண்டிருப்பது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே.

தரப்படுத்தல் என்ற சட்டத்தின் மூலம் கல்வியில் தடையினை விதித்தார்கள். இதன் காரணமாகவும் எமது நிலங்கள் பறிக்கப்படுகின்றமை, கல்வி உரிமை பறிக்கப்பட்டமை காரணமாகவும் வேறு வழியின்றி எமது இளைஞர்கள் போராட்டத்தினை ஆரம்பித்தார்கள். அவர்கள் வெறுமனே வீம்புக்குப் போராடவில்லை. எமது இறைமையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே அந்தப் போராட்டம்.

எமது ஆயுதப் போராட்டம் ஒரு தனி நாட்டுக்கான சகல விடயங்களையும் கொண்டு செயற்பட்டது. ஆனால் உலக நாடுகள் சிலவற்றின் அங்கீகாரம் கிடைக்கின்றமை மாத்திரமே எஞ்சியிருந்தது. அந்தளவு பெருமிதத்துடன் இருந்த அந்தப் பேரியக்கத்தை 2004 ஆம் ஆண்டு எம்முடைய மண்ணின் மைந்தர்களே இரண்டாகப் பிளந்தார்கள். அதன் பின் எமது மக்கள் இலட்சக் கணக்கில் கொல்லப்பட்டார்கள், வதைக்கப்பட்டார்கள், காணாமல் ஆக்கப்பட்டார்கள், சொத்துக்கள் அழிக்கப்பட்டன, தடுப்பு முகாம்களிலே இருந்தார்கள். இவ்வாறு எத்தனையோ விடயங்கள் நடந்தேறின. 2009ம் ஆண்டு மே 18 இல் இதயத்தில் இரத்தம் கசியாத எந்தவொரு தமிழனும் இருந்திருக்க மாட்டான். இயக்கத்தைப் பிரித்தவர்கள் வெற்றிக்களிப்பை அடைந்தார்கள்.

2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் கொண்டுவரப்பட்ட வழக்கின் மூலம் வடக்கு கிழக்கைப் பிரித்தார்கள். இருதரப்பினையும் ஆராயாது ஒருகுடைத் தீர்ப்பின் மூலம் அது இடம்பெற்றது. இன்று கிழக்கை மீட்கப் போகின்றோம் என்று சொல்லும் நம்மவர்களும் அதற்குத் துணை நின்றார்கள்.

இணைந்த வடக்கு கிழக்கிலே தமிழர்கள் எத்தனை வீதம், பிரிக்கப்பட்ட கிழக்கில் தமிழர்கள் எத்தனை வீதம்? பிரிக்கப்பட்ட கிழக்கில் தமிழர்களும் ஏனைய இனத்தவர்களும் ஒரு சிறு வித்தியாசத்திலேயே இருக்கின்றோம். இப்போது இவர்கள் சொல்லுகின்றார்கள் முஸ்லிம் மக்களிடம் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றப் போகின்றார்களாம். இந்த கிழக்கைப் பிரித்துக் கொடுத்தது யார்? முஸ்லீம் மக்களின் விகிதாசார அதிகரிப்பு தோற்றத்திற்குக் காரணம் யார்?

எமது பேரியக்கத்தைப் பிரித்து, எமது போராட்டத்தை பலமிழக்கச் செய்துவிட்டு இப்போது சொல்லுகின்றார்கள் இளைஞர்களைக் காப்பாற்றவதற்காகச் செய்தேன், இல்லாவிட்டால் இளைஞர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று. வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்திலே இவ்வாறு சொல்லியிருந்தால் காறி உமிழ்ந்திருப்பார்கள்.

விடுதலையைக் காட்டிக் கொடுத்தவர்களை யாரும், எந்த வரலாறும் மக்களைக் காப்பாற்றியவர்கள் என்று எழுதியது கிடையாது. இவர்களது கருத்துக்களை நம்புகின்ற அளவிற்கு தமிழ் மக்கள் இருக்க மாட்டார்கள். இவ்வாறு எமது தமிழ்த் தேசியத்தை இக்கட்டான நிலைமைக்குள் தள்ளியவர்கள் இப்போது சிங்கள தேசியவாதத்தினுடைய பிரதிநிதிகளாக இந்தத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றார்கள்.

தற்போது தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு மிகக் குறைந்தளவிலான தமிழர்களே வாக்களித்தோம். அவரது பதவிப் பிரமாணத்தின் போதே சிறுபான்மையினரைத் தோற்கடிக்கும் சைகையை அவர் காட்டியிருந்தார். அவ்வாறு சிறுபான்மை மக்களைத் தோற்கடிப்பதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்ற கட்சியோடு சேர்ந்திருப்பவர்கள் தான் இங்குள்ள மொட்டு. படகு, சூரியன் எல்லாம்.

தொல்பொருள் ஜனாதிபதி செயலணியில் சிங்கள் பௌத்த தேசியத்தை கையிலெடுத்திருக்கும் நபர்களை இணைத்து அதனை ஆரம்பித்திருக்கின்றார். அவர்கள் இப்போதே வடக்கு கிழக்கில் கை வைக்கத் தொடங்கி விட்டார்கள். புத்தசாசனத்தைக் காப்பாற்றவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே எம்மவர்கள் அவர்களுடன் இணைந்து வாக்குக் கேட்கின்றார்கள்.

வேட்டையாடுபவர்கள் ஓர் உத்தியைக் கையாள்வார்கள். வேட்டைக் கடாவைக் கொண்டு எவ்வாறு வேட்டையாடுவார்களோ அவ்வாறு எம்மவர்களைத் தமிழர்கள் என்ற அடையாளத்தைக் கொண்டு மக்கள் முன்னே நிறுத்தியிருக்கின்றார்கள். எம்மை வேட்டையாடுவதற்கு வேட்டைக் கடாவாக வந்திருப்பவர்கள் எவ்வாறு எம்மைக் காப்பாற்றப் போகின்றார்கள்?

விடுதலை வீரனுக்குப் போடப்படுகின்ற விலங்கிற்கும், கொலைச் சந்தேக நபருக்குப் போடப்படுகின்ற விலங்கிற்கும் வித்தியாசம் உண்டு. அதனை மக்கள் விளங்கிக் கொள்வார்கள். விலங்குடன் இருக்கின்றவர்கள் எல்லாம் விடுதலை வீரர்கள் அல்லர்.

எங்களுக்கு அபிவிருத்தியைத் தரப் போகின்றார்களாம். கண்ணிரண்டையும் விற்று சித்திரம் வாங்கி என்ன பயன் உண்டு? அபிவிருத்தி என்பதும் எமக்கான உரிமை. அதனை உரிமையுடன் பெற வேண்டும். அதனை நாங்கள் சலுகையாகப் பெற வேண்டிய அவசியம் இல்லை. எங்களது இருப்பைக் காப்பற்றிக் கொண்டு தான் எமது விடயங்களை நகர்த்த வேண்டும்.

எமது உரிமைகள் தொடர்பில் நாட்டின் அரசமைப்புச் சட்டத்திலே எழுத்தப்பட்டால் தான் எமது இனம் உரிமையுடன் வாழும். அதனோடு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளே எமது மக்களுக்காக நிலைத்து நிற்கும். இல்லையெனில் இன்னும் சில காலங்களில் அது மற்றவர்கள் உரித்தாக்கும் அளவிற்குச் செல்லும். அவ்வாறாக எமது உரிமையை அரசமைப்பில் எழுதும் முயற்சியில் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். தமிழர்களின் இருப்பை தமிழர் தேசியத்தை நாங்கள் காப்பாற்றி வருகின்றோம்.

அபிவிருத்தி என்ற மாயையில் தமிழர்கள் என்ற உணர்வு இல்லாமல் போனதால் இலங்கையில் பல பாகங்களில் நாம் எம்மினத்தைத் தொலைத்து விட்டோம். வடக்கு கிழக்கிலே நாங்கள் தமிழன் என்கின்ற உணர்வுடன் வாழ்ந்து போராடிக் கொண்டிப்பதாலேயே எமது அடையாளத்தை, எமது நிலத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

சிங்கள தேசம் எம்மை விழுங்க இருக்கின்ற சந்தர்ப்பத்திலே எம்மைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியத்தோடு நாங்கள் ஒன்றியை வேண்டும். திசை தடுமாறிய பறவைகளாக எம்மில் பலர் மொட்டு, கறுப்புச் சட்டை என்று திரிகின்றார்கள். சங்கே முழங்கு என்ற கூறியவர் வாழ்வும், வளமும் பெற்று எம் மக்களுக்கு சங்கு ஊதுகின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே நான்கு தமிழ் உறுப்பினர்கள் வவேண்டிய கட்டத்திலே காலா காலமாக சகோதர இனத்தவர்களுடன் சேர்ந்து வாக்குகளைப் பிரித்து அவர்கள் பாராளுமன்றம் செல்ல வழி வகுத்தார்கள். கடந்த தேர்தலில் பிள்ளையானுக்குப் அளித்த வாக்குகளால் ஹிஸ்புல்லாவும், கணேசமூர்த்திக்கு அளித்த வாக்குகளால் அமீர்அலியும் வந்தார்கள். அதே போல் தான் இம்முறையும் அவர்கள் பிரிந்து நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வரக் கூடிய வாக்குளைப் பிரித்து அதுவும் சகோதர இனத்தவர்களுக்கே சாதகமாக வரும் வகையில் செயற்படுகின்றார்கள்.

கொரோனா சொல்லித் தந்த பாடம் வீட்டிலேயே இருங்கள். வீடுதான் பாதுகாப்பானது என்று. அதுதான் உண்மையும் கூட. வீடு எமது சின்னம். வீட்டை மனதில் வைத்து எமது வாக்குகள் சிதறாமல், சிந்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அளித்து 04 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். – என்று தெரிவித்தார்

# பிரிட்டனில் கறுப்பு ஜூலை கவனவீர்ப்பு



இலங்கை அரசினால் 1983 ஜூலை 23ஆம் திகதி முதல்திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழின அழிப்புக்கு எதிரான தினத்தை நினைவூட்டும் முகமாகவும் மற்றும் தொடர்ச்சியான தமிழின அழிப்புக்குமான கண்டனத்தை இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கும் வகையிலும் பிரித்தானியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

பிரித்தானியாவின் ஹைட்பார்க் கார்டன்ஸ், இலக்கம் 13 இல் அமைந்திருக்கும் இலங்கை தூதரகத்திற்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

தமிழ்மக்கள் படுகொலைசெய்யப்பட்டு 37 வருடங்கள் ஆன பிறகும் சர்வதேசம் இதனை இனப்படுகொலை என ஏன் இன்னும் பிரகடனப்படுத்தவில்லை என்பதனை இந்த ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வலியுறுத்திக் கேட்ட்னர்.

இந்த அசாதாரண சூழலிலும் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டியும், இனப்படுகொலை செய்த இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரியும், பிரித்தானிய அரசாங்கத்தின் கொவிட் 19 வழிகாட்டுதலின் படி ஆர்ப்பாட்டகாரர்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவின் தமிழ் பொதுமக்களும், பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம், தமிழ் இனச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாவீரர்களைக் கொச்சைப்படுத்திய கூட்டமைப்பினர் களப் போராளிகள் போன்று வீரவசனம் பேசுகின்றனர்

## கேடயம் சின்னத்தில் போட்டியிடும் சந்திரகுமார் குற்றம் சாட்டுகின்றார்




(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்பாணம்,ஜூலை 27

மாவீரர்களைக் கொச்சைப்படுத்திவிட்டு தேர்தல் காலங்களில் தாங்களும் களப் போராளிகள் போன்று மேடைகளில் கூட்டமைப்பினர் வீரவசனம் பேசுகின்றனர் என சமத்துவக் கட்சியின் தலைவரும் கேடயம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு ஐந்தினுடைய முதன்மை வேட்பாளருமான சந்திரகுமார் முருகேசு தெரிவித்தார்.

சுயேச்சைக் குழு ஐந்தினுடைய தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

மாற்றத்திற்கான தேர்தலுக்கு வாக்களிக்க மக்கள் தயாராக உள்ளனர். இந்த தேர்தலில் மாற்றம் ஒன்று ஏற்படாது போனால் கடந்த பத்து வருடங்களாக நாம் அனுபவித்த துன்பங்கள் மேலும் 5 வருடங்களுக்கு நீடிக்கும். அதற்கு நாம் தாக்குப்பிடிப்போமா என்பதே சந்தேகமாக உள்ளது.

இறுதி யுத்தத்தில் பலவற்றை இழந்து மக்கள் வழமையான வாழ்விற்கு திரும்பிய போது 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பினர் 16 நாடாளுமன்ற ஆசனங்களை கைப்பற்றற்ற். அந்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களதும் வினைத்திறன் அற்ற தலைமைத்துவத்தினால் மக்களுக்கு மிஞ்சியது வறுமையும் வேதனையுமே ஆகும்.

விடுதலைப் புலிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பே தமிழ் தேசியக் கூட்டமைப்பு என மக்கள் நம்பினார்கள். அதனாலேயே மக்கள் நம்பி வாக்களித்தனர். ஆனால் 2010ற்கு முன்னர் இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் தற்போதுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. 2010ற்கு முன்னர் இருந்த கூட்டமைப்பு தான் விடுதலைப்புலிகளின் அடையாளமாக, அவர்களின் கொள்கைகளை பின்பற்றி வந்தது. ஆனால் 2010ற்கு பின்னரான கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் கொள்கைகளை நீக்கி அதற்கு எதிரான வழியில் செல்லத் தொடங்கியுள்ளது. அதனை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

உன்னதமான விடுதலைப் போராட்டத்திற்கு இரத்தம் சிந்தியவர்களை பயங்கரவாதிகள் என ஒற்றை வார்த்தையில் கூட்டமைப்பினர் கொச்சைப்படுத்தினர். மாவீரர்களை கொச்சைப்படுத்திவிட்டு தேர்தல் காலங்களில் தாங்களும் களப் போராளிகள் போன்று மேடைகளில் வீரவசனம் பேசுகின்றனர். நான் ஆரம்ப காலகட்டங்களில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறேன். ஸ்ரீலங்கா படைகளுக்கு எதிரான போரில் விழுப்புண் அடைந்திருக்கிறேன். ஆனால் தற்போது எமது விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்காதவர்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக வருகிறார்கள்.

மாகாண சபை தேர்தலின் போது மக்கள் கூட்டமைப்பினருக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வழங்கியிருந்தனர். ஆனால் அவர்கள் வெறுமனே பிரேரணைகளையே நிறைவேற்றினர். மாகாண சபையின் நான்கு அமைச்சர்களும் ஊழலில் ஈடுபட்டனர் எனப் பதவி நீக்கப்பட்டனர். பின்னர் அவர்களுக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டார்கள். அவர்களைப் பார்த்து சிங்களவர்கள் கேவலமாக சிரித்தார்கள். சர்வதேசம் இவர்களின் செயற்பாடுகளால் அவநம்பிக்கையடைந்தது. கூட்டமைப்பினர் தங்களுக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டிருக்காமல் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்றி இருக்கலாம்.

கடந்த நல்லாட்சியில் அரசின் பங்காளிகளாக இருந்த கூட்டமைப்பினர் தங்களிடம் இருந்த பேரம் பேசும் சக்தியினை பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். வரவுசெலவுத் திட்டத்தின் போதோ, ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போதோ பேரம் பேசல்களை மேற்கொள்ளாது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினார்கள்.

இறுதி யுத்தத்தின் போது அதிகளவில் எமது இளம்பராயத்தினரை இழந்துவிட்டோம். தலைமுறையில் பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. எமது இனத்தின் விருத்தி வீதம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. கிழக்கில் சிங்கள மக்களும் முஸ்லீம் மக்களும் செழிப்பான வாழ்வினை வாழ்கின்றனர். ஆனால் எமது மக்களோ இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். தமிழர்களின் தலைநகரான திருகோணமலையில் தான் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இருக்கிறார். அங்குள்ள மக்கள் நித்தம் இன்னல்களை அனுபவிக்கின்றார்கள்.

கிழக்கின் பல பிரதேசங்களை நாம் இழந்துவிட்டோம். தமிழர்களின் இருப்பே கேள்விக்குறியாகி வருகின்ற நிலையில் தமிழ் தேசியவாதம் எவ்வாறு மக்களை பாதுகாக்க போகின்றது என்ற கேள்வி எழுகின்றது. தேசியம் என்று வாயால் பேசிவிட்டு செல்வதை விடுத்து தமிழர்களின் இருப்பையும் தமிழ் தேசியத்தையும் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

யாழ்பாண நகர்ப்புறங்களில் உள்ள கட்டடங்களைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் செல்வந்தர்கள் என நினைப்பார்கள். ஆனால் யாழில் 33,000 குடும்பங்கள் குடிசைகளில் வாழ்கின்றனர். கோவில் காணிகளிலும் குத்தகை நிலங்களிலும் வசிக்கிறார்கள். யாழ் மாவட்டத்தை விட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மேலானது என்றே கூறலாம் அந்தளவிற்கு இங்கு உட்கட்டுமான வசதிகளை உயர்த்த வேண்டிய தேவை உண்டு. இங்கு சாதியக் கட்டமைப்புக்களை ஊக்குவித்து வளர்க்கின்ற நபர்கள் உள்ளனர். உண்மையில் இவற்றில் மாற்றம் ஏற்பட வேண்டும். அனைவருக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டும்.

மக்களின் எதிர்காலத்தை நீண்ட நோக்கோடு திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். எங்களுடைய எதிர்கால திட்டமிடல்கள் தொடர்பாக எமது விஞ்ஞாபனத்தில் வெளியிட்டுள்ளோம். இம்முறை மாற்றத்தினை விரும்பும் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். - என்றார்.

## முஸ்லிம்களைச் சிறுமைப்படுத்துகின்ற அரசின் முகவர்களே விமல், கம்மன்பில



ரிஷாத் குற்றச்சாட்டு

நல்லிணக்கத்தை விரும்பாத விமல்வீரவன்ஸ, உதய கம்மன்வில போன்றவர்கள் எமது சமூகத்தை சிறுமைப்படுத்தி எமது மையத்துக்களை எரிக்கும் அரசின் முகவர்களாகச் செயற்படுகின்றனர்.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் குற்றஞ்சாட்டினார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் அப்துல்லாஹ் மஹ்ரூப்பை ஆதரித்து குச்சவெளியில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எம்மை நோக்கி பல சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன .நாம் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் நமக்காகப் பேசுகின்ற நல்ல தலைமைகள் நாடாளுமன்றம் செல்லவேண்டும். வரப் போகின்ற நாடாளுமன்றத்தில் சிறுபான்மை அரசியல் தலைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கண்டியிலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றம் வெல்வதற்காக வேண்டி எமது கட்சியின் ஏழு உறுப்பினர்களும் பரப்புரைப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 20 ஆயிரம் எமது ஆதரவாளர்களை அவருக்கு வாக்களிக்குமாறு கேட்டுள்ளேன்.

இந்த நாட்டிலே சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் இணைந்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பாகும்.

நல்லிணக்கத்தை விரும்பாத விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் எமது சமூகத்தை சிறுமைப்படுத்தி எமது மையத்துக்களை எரிக்கும் அரசின் முகவர்களாகச் செயற்படுகின்றனர். அவர்களது அரசியல் இருப்புக்காக அவர்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றார்கள். அமைதியாக இருந்த இஸ்லாமிய சமூகத்தை வம்புக்கு இழுத்து இந்த மக்களை இந்த நாட்டிலே இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்கின்ற சதித் திட்டத்தை அவர்கள் தீட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

சமூகத்துக்காகப் பேசுவதும் அநியாயத்தைத் தட்டிக் கேட்பதும் குற்றமா? எனவே, துணிச்சல் மிக்க ஆற்றலுள்ள எந்தவொரு எதிர்க் காட்சிகளுக்கும் பயப்படாமல் பேசுகின்ற தலைமைகளைத் தெரிவு செய்யுங்கள் - என்றார்.



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விஞ்ஞாபனத்திலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமெனக் கோரிக்கை




## நேற்றுத் திருமலையில் வெளியீடு

திருகோணமலை,ஜுலை 27

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று திருகோணமலையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

* இனப்படுகொலைக்கு சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும்.

* இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் எந்தவொரு தீர்வும் சாத்தியமில்லை.

* தமிழ் மக்கள் பேரவையினால் தயாரித்து வெளியிடப்பட்ட வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம், அதன் இறைமை அங்கீகரிக்கப்பட்டு சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வு வேண்டும்.

* அதனை ஏற்பதற்கு சிறீலங்கா அரசு மறுத்தால் ஐக்கிய நாடுகள் சபையிடம் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த வேண்டுமெனக் கோருவோம்.

* இனவழிப்பு யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை யுத்தினால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தி அதனை கட்டியெழுப்ப சர்வதேச சமூகத்தின் நிதி உதிவி வேண்டும்.

-மேற்படி முக்கிய கோரிக்கைகள் உட்பட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் உள்ளடங்கலாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

மேற்படி நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞானம் வெளியீடு செய்யும் நிகழ்வு கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது தலைமையில் தமிழர் தேசத்தின் தலைநகர் திருகோணமலையில் இடம்பெற்றது.

தேர்தல் விஞ்ஞாபனத்தின் முதற் பிரதியை கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரனால், கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் விஞ்ஞாபனத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பில் கொள்கை விளக்கவுரை ஆற்றினார்.

# ஒருவரை ஒருவர் குற்றஞ்சுமத்துவதுதான் தற்போதைய அரசியல்வாதிகளின் இயல்பு

## ஐ.தே.க. தலைவர் ரணில் தெரிவிப்பு



நாட்டில் தற்போதுள்ள அரசியல்வாதிகள் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சுமத்துவதையும், விமர்சிப்பதையும், விருப்பு வாக்குகளையும் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றனர். எவரும் எதிர்காலத் திட்டம் பற்றி கொள்கை ரீதியாகப் பேச முன்வருவதில்லை.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

லியோ கழகத்தின் 15ஆவது வருடாந்த மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா பரவல் காரணமாக நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. அனைத்து மக்களதும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் இதன்போது பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

ஐரோப்பா, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளில் இரண்டாவது அலை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் இரண்டாவது அலை பரவ வாய்ப்பளிக்கப்பட்டால் பொருளாதார நிலைமை என்னவாகும்?

அதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளனவா? பொருளாதாரம் மாத்திரமல்ல. கல்வி உள்ளிட்ட மக்களுடன் மிகவும் ஒன்றித்துள்ள ஏனைய துறைகளையும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

இவைப் பற்றி எதிர்கால சந்ததியினரான தற்கால இளைஞர்களே சிந்திக்க வேண்டும். விவசாயம் தொழில்நுட்பமயப்படுத்தப்பட வேண்டும். ஏற்றுமதி விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்படப் போகும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று சிந்திக்க வேண்டும். இவ்வாறான நெருக்கடியான சந்தர்ப்பங்களில் உரிய தீர்வுகளை வழுங்க வேண்டிய அரசியல் தலைவர்களாகிய நாம் எமது கடமைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.

தற்போதுள்ள அரசியல்வாதிகள் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சுமத்துவதையும், விமர்சிப்பதையும், விருப்பு வாக்குகளையும் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றனர்.

எவரும் எதிர்காலத் திட்டம் பற்றி கொள்ளை ரீதியாகப் பேச முன்வருவதில்லை. இதுபோன்று அல்லாமல் தற்போதைய இளைஞர்கள் தமது தலைமைத்துவப் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

வெளியில் இருந்து விமர்சிப்பவர்களிடம் அதிகாரங்களை வழுங்கி அவர்களைச் செயற்பட வைக்க வேண்டும். அப்போதுதான் அவற்றிலுள்ள சவால்களை அவர்களால் உணர முடியும். எனவே, எதிர்கால சந்ததியினர் எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும் அவற்றுக்கு முகங்கொடுத்து முன்னேற வேண்டும் – என்றார்.

# தந்தையாகப் போகும் நாமல்; பேஸ்புக்கில் படம் வெளியீடு



ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, விரைவில் தந்தையாகப் போகின்றார் என்று தெரியவந்துள்ளது.

அவரது மனைவி லிமினி வீரதுங்க தனது முதலாவது சிசுவைப் பெறத் தயாராகி வருகின்றார். நாமல் ராஜபக்ஷ கர்ப்பிணியான தனது மனைவியுடன் ஜோடியாக நிற்கும் படம் ஒன்றை நேற்று பேஸ்புக்கில் பதிவேற்றியிருந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரான நாமல் ராஜபக்ஷ தனது இளைய சகோதரர்கள் திருமணம் செய்துகொண்ட பின்னர், இறுதியாக கடந்த வருடம் திருமணம் செய்துகொண்டார்.

அவரது இளைய சகோதரான ரோஹித ராஜபக்ஷ ஏற்கனவே ஒரு பிள்ளையின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

நாமல், யோஷித்த மற்றும் ரோஹித்த ஆகியோரில் ரோஹித்தவே முதலில் திருமணம் செய்துகொண்டார்.

# இவ்வாண்டில் சிறுவர் துஷ்பிரயோகம்; இதுவரையில் 5,242 முறைப்பாடுகள்!

இலங்கையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஜுலை மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் 5,242 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகள் 1,642 பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் 2020 ஜனவரி 15 ஆம் திகதி வரையான 2 வார காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை 54 ஆக காணப்பட்டதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை ஏறக்குறைய மூன்று மாத காலத்திற்கு நீடித்த ஊரடங்கு உத்தரவு காரணமாக சிறுவர்கள் மீதான கொடுமை மற்றும் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir
பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்
☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

# அனைத்து உரிமைகளும் தமிழர்களுக்கு வேண்டும்

## புலிப் பூச்சாண்டி இப்போது ஏன் என்று கேட்கின்றார் பொன்சேகா



**இலங்கை மூவின மக்களுக்கும் சொந்தமான நாடு. எனவே, மூவின மக்களும் சகல உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழவேண்டும். இதில் தமிழர்கள் விதிவிலக்கல்லர்.**

**– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை மஹிந்த அணியினர் அடியோடு நிராகரித்து விமர்சித்து வருவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு, கிழக்கு மக்களுக்காகவே தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

அதை நிராகரிப்பதற்கோ அல்லது விமர்சிப்பதற்கோ அரசுக்கு எவ்வித அருகதையும் இல்லை.

2009ஆம் ஆண்டுடன் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து விட்டோம். இப்போது எதற்குப் புலிகள் தொடர்பிலும், அவர்களின் கோரிக்கைகள் குறித்தும் அரசு அலட்டிக்கிக்கொள்ள வேண்டும்?

தேர்தல் காலங்களில் இனவாதத்தைத் தூண்டிவிட்டு பயங்கரவாதம் தொடர்பில் பரப்புரைகளை மேற்கொள்வதில் இந்த அரசு முதலிடம் வகிக்கின்றது.

தமிழ் மக்களின் நலனில் எவ்வித அக்கறையும் இன்றி சர்வாதிகாரத்தின் வழியில் செயற்படும் இந்த அரசு, அவர்களுக்கு ஒருபோதும் உரிமைகளை வழங்கவே மாட்டாது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்கும்; சுதந்திரம் கிடைக்கும்; தீர்வு கிடைக்கும்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக் கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுள்ளார்.

எனவே, நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தால் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம் – என்றார்.

## உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு பொதுத்தேர்தலுக்குப் பின்பு தடை

### பிரதமர் மஹிந்தர் தகவல்



பொதுதேர்தலின் பின்னர் வெளிநாட்டில் இருந்து உருளைக்கிழங்கை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிமடை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விவசாயிகள் ஆளும் யுகம் ஒன்றை உருவாக்குவதே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்பார்ப்பு என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ரணிலும் மைத்திரிபாலவும் முரண்பட்டனர். இதனால் கடந்த 5 வருடங்களில் மக்களுக்கென செயற்திறன் மிக்க பணிகள் முன்னெடுக்கப்படவில்லை.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு வளங்களை விற்பதற்கான தேவையே காணப்பட்டது. சர்வதேசத்துடன் பல ஒப்பந்தங்களை மேற்கொண்டது. நாட்டிற்கு பொருத்தமற்ற ஒப்பந்தங்களில் இருந்து விலக திட்டமிட்டாலும் அது இலகுவான காரியமல்ல. இதனால் சர்வதேசத்தைப் பகைத்துக்கொள்ளக்கூடிய நிலை உருவாகும்.

– என்றார் அவர்.

தமது அரசாங்கத்தில் விவசாயிகள் வாழ்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## செல்வம், சார்ள்ஸ், சிவமோகனுக்கு தக்க பாடம் புகட்டவேண்டும் மக்கள்

### வவுனியா பரப்புரைக் கூட்டத்தில் சிவாஜி ஆவேசம்

செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சிவமோகன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்முறை மக்கள் தகுந்த பாடத்தைப் புகட்ட வேண்டும்.

–இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

தலைவர் கைகாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதனால் வாக்களிக்க வேண்டும் என்கிறார்கள். அப்படியானால் ஜெயசிக்குறு நடவடிக்கையில் பங்கெடுத்த கருணாவைத் தலைவர் பிரபாகரன் அன்று பாராட்டியிருந்தார். அவருக்கு விருதும் வழங்கப்பட்டது. அப்படியானால் தலைவர் கைகாட்டிய கருணாவை நீங்களும் நாங்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோமா? அதுபோலவே கூட்டமைப்பும் வீட்டுச் சின்னமும் இருக்கின்றன.

செல்வம் அடைக்கலநாதன் சொல்கின்றார் வீட்டைக் காப்பாற்ற வேண்டுமாம். தேர்தல் தோல்வியுடன் இந்தியா சென்ற அவரை வசந்தன் எம்.பி. இறந்த பின்னர் நாம் போய் அழைத்து வந்தோம். இன்று 20 வருடங்கள் இராஜா போல் பதவியில் இருக்கின்றார். இம்முறை மக்கள் அவருக்கு வழங்கும் தீர்ப்பை நீங்கள் பார்ப்பீர்கள்.

இந்த வீட்டில் சாராயத் தவறணை நடந்துகொண்டிருக்கின்றது. இங்கே இருக்கின்ற வேட்பாளர்கள் சாராயத் தவறணையை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே விபசாரம் நடக்கின்றது. அப்படியானால் வீட்டையும் உடைத்து இவர்களை ஊரை விட்டே ஓட ஓடத் துரத்த வேண்டும்.

தமிழரசுக் கட்சியை விட்டு நீங்கள் வரமாட்டீர்கள் என்று ரெலோ கூட்டத்தில் சண்டையிடுவார் வினோநோகராதலிங்கம். அவரிடம் கேட்கிறேன். பழசுகளை மறந்துவிட்டீர்களா? அத்துடன் விட்டு விடுகின்றேன். ஏனெனில் இம்முறையும் நீங்கள் தோல்விதான். அதனால் உங்களைப் பெரிதாக அடிக்க விரும்பவில்லை.

மாவை சேனாதிராஜாவுடன் 45 வருடங்கள் அரசியலில் ஈடுபட்டவன் நான். தனிப்பட்ட முறையில் அவர் நல்லவர். ஆனால், முதுகெலும்பில்லாதவர். டம்மியான பொம்மை அவர். நடைமுறையில் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், கூட்டமைப்பின் தலைவராகவும் சுமந்திரனே செயற்படுகின்றார்.

அது தொடர்பில் வாய் திறக்க அங்கத்துவக் கட்சிகள் தயாரில்லை. ஏனெனில், இவர்களில் பலர் சுமந்திரனிடம் அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் கடமைப்பட்டிருக்கின்றார்கள். மறுக்க முடியுமா அவர்களால்?

சின்னப்பொடியன் தம்பி மயூரன் சுமந்திரனுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார். இன்று சார்ள்ஸ் நிர்மலநாதனுடன் கூட்டுச் சேருவதற்காகச் சமரசமாகின்றார். அதுபோலவே சிவமோகனும் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தார். இந்தத் துரோகங்கள் எல்லாம் எங்கே போய் முடியப் போகின்றன்? இவர்களுக்கு மக்கள் தகுந்த பாடத்தைப் புகட்ட வேண்டும்.

சுமந்திரனின் வடமராட்சி வீட்டில் ரணிலுக்கு இளநீரும் நுங்கும் வெட்டிக் கொடுத்தனர். ஆனால், மக்களுக்கு எதனைப் பெற்றுக்கொடுத்தனர்? மற்றையவர் மகளின் பிறந்த தினத்துக்கு ஜனாதிபதியை அழைத்து கேக் வெட்டினார். இதுபோல் ஊரவர் வீட்டு பிள்ளைகளை நினைத்தார்களா?

ரிஷாத் பதியுதீன் கோரப்பிடிக்குள்ளே வன்னி சிக்கியிருக்கின்றது. அவருக்கு ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாக்களித்துள்ளார்கள். இனிமேல் ஒருவரினது வாக்குக்கூட ரிஷாத் அணிக்கு வழங்கப்படக் கூடாது.

ஐயா மஸ்தான் கூட படுகொலையாளர்களான கொலைகாரக் கும்பலுக்கு ஆதரவு வழங்குகின்றார். நீங்கள் செய்யும் மாட்டு வியாபாரமும் கொலைதான். எனவே, ஓய்வுபெற்றுவிட்டு மாட்டிறைச்சியைக் கொழும்புக்கு அனுப்பும் வழியைப் பாருங்கள். அரசியலில் உங்களுக்கு இடமில்லை.

சில முன்னாள் போராளிகளும் கூட்டமைப்புடன் நிற்கின்றார்கள். அவர்கள் குறுக்கால வந்தார்களோ, நேராக வந்தார்களோ தெரியவில்லை. நாம் போராளிகளையும், போராட்டத்தையும் மதிக்கின்றோம். ஆனால், நீங்கள் கோட்டாவுடன் நிற்கிறீர்கள், மஹிந்தவுடன் நிற்கிறீர்கள். தற்போது கூட்டமைப்புடன் நிற்கிறீர்கள். சரியான இடத்தில்தான் நிற்கிறீர்கள். ஏனெனில் எல்லாமே ஒன்றுதான்.

எமது மக்கள் நெருக்கடியான நிலையில் தற்போது இருக்கின்றார்கள். எனவே, சரணாகதி அரசியலை நாம் செய்ய முடியாது. இந்தநிலையில் கூட்டமைப்புக்கு வாக்களித்தால் விளக்குப் பிடித்துக் கொண்டுபோய் கிணற்றுக்குள் விழுவதாகவே அர்த்தம்.

இன்று திருகோணமலையில் சம்பந்தன் தோற்கடிக்கப்பட்டு எமது வேட்பாளரான ரூபன் வெற்றிபெறுவதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. சம்பந்தன் தலைமையில் இருக்கின்ற இந்த அணி அலிபாபாவும் நாற்பது திருடர்களைப் போலவே வேட்பாளர்களைக் களம் இறக்கியுள்ளனர். எனவே, தமிழ் மக்கள் தெளிவான தீர்ப்பை வழங்கவேண்டும் – என்றார்.

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## வடமாகாண வெங்காயமும் அரசியல்வாதிகளும்;



மேடையில் உணர்ச்சி பூர்வமாகப் பேசி வாக்குறுதிகள் வழங்கி நாடாளுமன்றம் சென்று, காலத்தை வீணடித்து, மக்களை இன்னமும் துன்பத்தில் வைத்திருக்கும் நம் அரசியல்வாதிகளைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

எமது தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் சர்வதேச நாடுகளிடமிருந்தும் ஜெனீவாவுக்குச் சென்று தீர்வுகாணுவோம் என்று கூறும் எமது தமிழ் அரசியல்வாதிகள் ஏன் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும்? நீங்கள் அவர்களுக்கு வழங்க வேண்டியது நாடாளுமன்றம் செல்ல வாக்குகள் அல்ல, சர்வதேசம் செல்ல வேண்டிய விசா அனுமதியும் விமானப் பயணச் சீட்டு மாத்திரமே.

கிணற்றில் தொலைத்ததை சமுத்திரத்தில் தேடும் எமது அரசியல்வாதிகளின் 70 ஆண்டு கால தீர்வு வாக்குறுதிகளை நீங்கள் நம்புகிறீர்களா?

கட்சிக்குள் குழு அமைக்கும் மத்தியகுழு, செயற்குழு என்று சகல செயற்பாடுகளுக்கும் குழு அமைத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளை தீர்க்க குழு அமைத்தார்களா?

20 ஆண்டுகளாக இருக்கும் அரசியல்வாதிக்கு சம்பாதிக்க பணத்;தையும் தேடிய சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு மக்கள் ஆணை தேவைப்படுகிறது. உங்கள் வாக்குகளை அவர்களுக்கு அளித்தால் தங்களுடைய சொத்துக்களை மேலும் பன்மடங்காக்கி, உங்களை அடக்கி ஆள்வார்கள். இதற்காகவா நீங்கள் வாக்களிக்கப்போகிறீர்கள்?



எம் தமிழ்மக்களின் சொத்தை ஆக்கிரமித்து அபகரித்த அரசியல்வாதிகள் உங்கள் சொத்துக்களை மீட்டுத் தருவார்கள் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

விடுதலைப் போராளிகளுக்கு தண்டனை வழங்கிய நீதியரசர் தற்போது அவர்களைப் போற்றி தலையில் தூக்கிவைத்து கொண்டாடும் நாடகம் உங்களுக்குப் புரிகிறதா?

வீணாகப் போகின்ற இரணைமடுத் தண்ணீரை வட பகுதி மக்கள் குடிப்பதற்கு விநியோகிப்பதை தடை செய்த அரசியல்வாதியை மறக்கமாட்டோம்! மன்னிக்கவும் மாட்டோம்!

சாதாரண அரச உத்தியோகத்தராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாடமாளிகைகளுக்கும், ஏக்கர் கணக்கான காணிகளுக்கும் பலகோடி ரூபாய் சொத்துக்களுக்கும் சொந்தக்காரர்களாகியது எப்படி?

புலி வேடம் பூண்டு, புலியாய் பேசி நாடாளுமன்றம் சென்றவர்கள் வாய் கட்டிய பூனைகள் போல் நாடாளுமன்றத்தில் நரித்தந்திரத்தை தங்கள் தேவைக்கு பயன்படுத்தி மீண்டும் 60 மாதத்தில் வருவார்கள். நீங்களும் வயிற்றைக்கட்டி உங்கள் குழந்தைகளையும் பாதாளத்துக்குள் தள்ளப்போகிறீர்களா?

தங்கள் பாதுகாப்புக்கு பெரும்பான்மை இனப் பாதுகாப்புப் படையினரை வைத்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் முதலில் அதனை அகற்றுங்கள். அதன்பின்னர் படையினரை வெளியேற்றுவதற்கான கோரிக்கையை முன்வையுங்கள்!

யாழ்ப்பாணத்து வெங்காயம் காரமானது. நமது அரசியல்வாதிகள் வாய்ச்சொல்லில் காரமானவர்கள். வாக்குறுதிகளை அள்ளிவீசி வாக்குவேட்டை செய்து, நாடாளுமன்றம் சென்று, ஐந்தாண்டுகளின் பின் சாதித்தவைகளை திரும்பிப் பார்த்தால் உரித்த வெங்காயம் போல் ஒன்றுமே இருக்காது. உரித்தவர்களுக்கு கண்ணீர் மாத்திரமே மிஞ்சியது.

**முதலில் கை சின்னத்திற்கும் உங்கள் மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றை அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து மற்றைய மூன்றாவது விருப்பு வாக்கை எமது கை சின்னத்தில் போட்டி இடும் நீங்கள் விரும்பியவருக்கு அளித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டு அதேசமயம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொள்வதன்மூலம், வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.**

**'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'**



**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்

## (விண்ணன்)



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinan05


இந்நாள்தழ யாழப்பாணம் இல.30 இநதுக கலலூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.07.2020 இல் வெளியிடப்பெற்றது.